(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 50.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2010, நவெம்பர் 24, புதன்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0259/ '10

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை வலயக் கல்வி அலுவலகத் திற்குட்பட்ட அங்குனுகொலபெலஸ்ஸ கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிப்படும் அரசாங்க பாடசாலைகளில் கல்வி பெறும் மாணவர்களின் பரீட்சையில் சித்தியடையும் சதவீதம் குறைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கல்வி வலயத்தில் 2007, 2008, 2009 ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழக கல்வியைப் பெறுவதற்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் அவர்களது பாடசாலைகளின் பெயர்களையும் தனித்தனியாக அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வருட ஆரம்பத்தில் பாட புத்தகங்களும் ஆசிரியர்களுக்கான பாட விதானங்களும் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாமை மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சியடைவதற்கு காரணமாயுள்ளதென்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அம்மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கும் ஆற்றல்களை வளர்ப்பதற்கும் தேவையான பாட புத்தகங்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி பாடசாலைகளை உரிய முறையில் கண்காணிப்பதற்காக உரிய உத்தியோத்தர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அதற்காக மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவை என்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0475/ '10

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் எப்போது நடைபெற்றது என்பதையும்,

(ii) ஐ.தே.க. மற்றும் ம.வி.மு. ஆகிய கட்சிகள் வெற்றி பெற்ற சபைகளின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்,

(iii) உரிய காலத்திற்கு முன்னரே இடைநிறுத்தப்பட்ட அல்லது கலைக்கப்பட்ட சபைகளின் எண்ணிக்கையையும்,

(iv) அச் சபைகளின் பெயர்களையும்,

(v) இடைநிறுத்தப்பட்ட அல்லது கலைக்கப்பட்ட திகதிகள், மற்றும் அதற்கான காரணங்களையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) நகர பிதாக்கள் அகற்றப்பட்ட, இடைநிறுத்தப்பட்ட, பதவி நீக்கப்பட்ட அல்லது விசாரணை தொடரப்படும் (ii)இல் குறிப்பிட்ட சபைகளின் பெயர்களையும்,

(ii) அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்ட திகதிகளையும் அவற்றுக்கான காரணங்களையும்,

(iii) தற்போது அவர்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவுகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0540/ '10

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், திருகோணமலை - திருக்கொண்டுயாடுமடு வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது என்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல், வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0572/ '10

4\.

கௌரவ அஜித் குமார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 06/2006 (iv) ஆம் இலக்க மற்றும் 2007.08.24 ஆம் திகதிய பொது நிருவாக சுற்று நிருபத்தின்படி மின்னயில் மருத்துவ தொழில்நுட்பவியல் விஞ்ஞானி மற்றும் முகாரி (விசேட) ஆசிய பதவிகளுக்கு MN-7-2006 A குறியீட்டு இலக்கத்துக்கான சம்பளத்தை வழங்கும்படி பணிப்பாளர் (உயிர் மருத்துவப் பொறியியல் சேவை) BES/පුලි/විවධ991 மற்றும் 2009.08.25 ஆம் திகதிய கடித மூலம் ஸ்ரீ ஜயவர்தனபுர பெரிய ஆஸ்பத்திரிக்கு அறிவித்துள்ள போதிலும் குறிப்பிட்ட ஆஸ்பத்திரியில் இந்தப் பணியாள் தொகுதியினருக்கு MT2-2006A குறியீட்டிலக்க குறைந்த சம்பளம் மட்டுமே வழங்கப்படுகிறது என்பதையும்,

(ii) இப்பணியாள் தொகுதியினரைவிடக் குறைந்த சம்பள மட்டத்தில் இருந்த சிவில் (மின், கட்டிட) முகாரி (Forman) பதவிகளுக்கு MN-7-2006A குறியீட்டிலக்க சம்பளம் வழங்கப்படுவதனால் சம்பள முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இந்த ஆஸ்பத்திரியிலுள்ள அனைத்து அனைத்து மருத்துவ உபகரணங்கள் (medical equipment) மற்றும் கதிர் இயக்க உபகரணங்களின் (X - Ray machine) பராமரிப்பு போன்ற அத்தியவசிய சேவைகளையாற்றும் இந்த மின்னியல் மருத்துவ மருத்துவத் தொழில்நுட்பவியல் விஞ்ஞானப் பணியாளர் தொகுதியினரை சிபாரிசு செய்யப்பட்ட சம்பள மட்டத்தில் அமர்த்தி இவர்களுக்கான நிலுவைச் சம்பளத்தையும் வழங்க அவர் நடவடிக்கை மேற்கொள்வாரா?

(இ) இன்றேல்,ஏன்?

0625/ '10

5\.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புத்தாக்குநர்கள் தமக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகள் தொடர்பாக இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாக அவர் அறிவாரா?

(ஆ) (i) புத்தாக்குநர்களான வர்த்தகர் செனெவிரத்ன, விரிவுரையாளர் ரிச்சட் நிக்கபிட்டிய மற்றும் கே.டி.பெரேரா என்போர் தமது ஆக்கங்கள் மோசடி செய்யப்பட்டுள்ளதாக மேற்கொள்ளும் கூற்றுக்கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்,

(ii) புத்தாக்குநர்கள், புத்தாக்குநர் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அதன் சில உத்தியோகத்தர்கள் தொடர்பாக மேற்கொண்டுள்ள எழுத்துமூலமான முறைப்பாடு தொடர்பாக முறையான விசாரணை நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்படுவாரா?

(இ) (i) புத்தாக்குநர் ஆணைக்குழுவின் தலைவரது தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் தொடர்பாக முறையானதொரு விசாரணையை நடத்துமாறு ஆக்கங்களின் கொள்ளையடிப்புக்கு உள்ளான புத்தாக்குநர்கள் சனாதிபதியிடம் எழுத்து மூலமாக கோரியுள்ளனர் என்பதையும்,

(ii) இந்த ஆணைக்குழுவுக்கு ஒருவருடத்திற்காக அரசாங்கம் வழங்கிய நிதி ஏற்பாடுகள் சிறியதொரு காலப்பகுதியினுள் செலவிடப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஈ) மேற்படி ஆணைக்குழுவின் கணக்காய்வு அறிக்கைகளை அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0628/ ’10

6.

கௌரவ அனுர திஸாநாயக்க,— கமத் தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள விவசாய ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(ii) இவர்களின் ஆட்சேர்ப்பு நடைமுறை யாதென்பதையும்,

(iii) விவசாய ஆலோசகர் தரங்கள் மற்றும் அதற்குரிய தரங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான தகைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாகாணங்களின் பிரகாரம் இருக்க வேண்டிய விவசாய ஆலோசகர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்,

(ii) ஊவா மாகாண சபைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட விவசாய ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iii) விவசாய ஆலோசகர் பயிற்சிக்கும் விவசாய டிப்ளோமாதாரிகளுக்கும் இடையில் சம தன்மை காணப்படுகின்றதா என்பதையும்,

(iv) விவசாய ஆலோசகர் பயிற்சி தரத்திற்குத் தேவையான தகைமைகள் யாவை என்பதையும்,

(v) விவசாய டிப்ளோமாதாரிகளை விவசாய ஆலோசகர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஒரு நடைமுறை உள்ளதாவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0641/ ‘10

7.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பணியாற்றும் அரச மற்றும் மாகாண சபைகளைச் சேர்ந்த அலுவலர்கள் யாவரென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு அலுவலருக்கும் நிறைவேற்றும் கடமைகள் அத்துடன், செலுத்தப்படும் ஆரம்ப மாதச் சம்பளம் தனித்தனியாக யாவையென்பதையும்,

(iii) ஆண்டுதோறும் இவ்வலுவலர்களுக்கு வேதனங்கள் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்தும்முகமாக செலவிடப்படும் நிதித் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) அரசாங்கத்தினால் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கென நியமிக்க எதிர்பார்த்துள்ள சனசபை செயலாளர்களின் கடமைப் பொறுப்புகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0642/ ‘10

8.

கௌரவ அஜித் குமார,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இவ்வாண்டினுள் தொழில்கள் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அதற்கான விளம்பரங்கள் வெளியிடப்பட்டு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) மேற்படி ஆட்சேர்ப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் மற்றும் நிறைவு செய்யப்படும் திகதிகள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி தொழில்கள் வழங்கும் வேலைத்திட்டத்திற்காக வரவு செலவுத் திட்ட மதிப்பீடு மூலம் ஒதுக்கீடு செய்வதற்கு எதிர்பார்க்கும் நிதி எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0338/ ‘10

9.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் லுணுகம்வெஹெர பிரதேச செயலகப் பிரிவின் அக்போபுர கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள வீரவில நவநகரம், அக்போபுர, சிறிய கிராமம் 19, இலக்கம் 447 ஆம் இலக்கமுடைய வீட்டுக் காணியானது, காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 1998.01.27 ஆம் திகதிய ஹம்/11/பூ 47494 ஆம் இலக்கமுடைய அளிப்புப் பத்திரம் மூலமாக திரு. எச். ஜீ. தயானந்தவுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) அதற்கிணங்க அந்த அளிப்புப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்ட நான்கு எல்லைக்குள் அமைந்துள்ள நிலப்பகுதி இவருக்குச் சொந்தமானதென்பதையும்,

(iii) திரு. தயானந்த 21 வருடங்களாக இக்காணியை அனுபவித்து வந்துள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி காணியில் வேறோர் ஆளை அனுமதியின்றி உட்புகுத்த அப்பிரதேசத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள கிராம உத்தியோகத்தர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளாரென்பதை அவர் ஏற்றுக் கொள்கிறாரா என்பதையும்,

(ii) ஆமெனில், திரு. தயானந்தவுக்கு முறையற்ற அழுத்தம் கொடுத்த அந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கை யாதென்பதையும்,

(iii) மேற்படி காணிச் சிக்கலைத் தீர்த்து வைப்பதற்கு திரு. தயாநன்தவுக்கு வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுப்பாரா என்பதையும்,

(iv) ஆமெனில், எவ்வளவு காலப்பகுதியினுள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0476/ ‘10

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 10 வருடங்களில் சிகரெட் மற்றும் மதுபானம் ஆகியவற்றின் விலைகள் எப்போது எந்தளவில் அதிகரிக்கப்பட்டன என்பதை வருடாந்த அடிப்படையிலும்,

(ii) கிகரெட் மற்றும் மதுபானம் ஆகியன முன்னைய விலையிலிருந்து கூட்டப்பட்ட ஒவ்வொரு முறையும் அதன்மூலம் ஈட்டப்பட்ட மொத்த வருமானத்தை வெவ்வேறாகவும்

அவர் அறியத்தருவாரா?

(ஆ) விலைகளை அதிகரிப்பதன் மூலும் சிகரெட் மற்றுமு் மதுபானம் ஆகியவற்றின் பாவனையை குறைக்கத் தூண்டுவதற்கு அரசாங்கம் ஆர்வங் கொண்டுள்ளதா என்பதை அவர் கூறுவாரா?

(இ) சிகரெட் மற்றும் மதுபானம் ஆகியவற்றிற்கு விதிக்கப்பட்ட சகலனினதும் வரிகளை தனித்தனியாக அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0541/ ’10

11.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், அல்லை – கந்தளாய் வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்,

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்,

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது என்பதையும்,

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்ளிப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்,

(ii) ஆமெனில், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திர விலைகள் யாவையென்பதையும்,

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல், வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்,

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0629 / 10

12\.

கௌரவ அனுர திஸாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை மூடப்பட்டுள்ள ஒவ்வொரு பாடசாலையிலும் இருந்த ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) (i) இலங்கையின் அரசாங்க பாடசாலைகளில் கணனி, இணையத்தளம், மின்சாரம், குடி நீர், தொலை பேசி, நூலகம், விஞ்ஞான ஆய்வுகூடம், விளையாட்டு மைதானம் மற்றும் மலசலகூடம் போன்ற ஒவ்வொரு வசதியுமுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை மாவட்ட ரீதியாக எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு வசதியுமுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை அரசாங்கத்தின் மொத்த பாடசாலைகளின் எண்ணிக்கையில் எத்தனை சதவீதமென்பதையும்,

அவர் தனித்தனியாக சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0478/ '10

13\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிதிப் பொறுப்புக் கூறல் சட்டத்தின் பிரகாரம் நாட்டின் நிதி நிலைமை எப்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்பதையும்,

(ii) நிதிப் பொறுப்புக் கூறல் சட்டத்தின் பிரகாரம் "கணக்குக் கூற்றுகள்" பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதா என்பதையும்,

(iii) ஆம் எனில், எப்போது அது சமர்ப்பிக்கப்பட்டது என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கணக்குக் கூற்றுகளில், நாளைய மாற்று வரம்பிடலுக்குட்படுதல் ஒரு தற்செயல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும், இல்லையெனில் அதற்கான காரணத்தையும்,

(ii) நாணயமாற்று வரம்பிடல் தொடர்பான தற்போதைய நிலைமை என்னவென்பதையும்,

(iii) செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் செலுத்த வேண்டாமென அறிவுறுத்தியுள்ள போதும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அரசாங்கம் சர்வதேச வங்கிகளுக்கு நாணயமாற்று வரம்பிடலுக்கான கொடுப்பனவுகளை செலுத்தியுள்ளதா என்பதையும்,

(iv) நாணயமாற்று வரம்பிடல் பிரச்சினை தொடர்பாக மேற்கொள்ளப்படும் திட்டவட்டமான நடவடிக்கையையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0494/ ’10

14.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் வசிக்கும் வாரக்குடி கமக்காரர்களின் வாரக்குடி உரிமை, காணி உரிமை மற்றும் பின்னுரிமையாளரின் உரிமைகள் அற்றுப்போயுள்ளதென்பதையும்,

(ii) இதற்குப் பிரதான காரணம் 2000 ஆம் ஆண்டில் 46ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) வாரக்குடி கமக்காரரின் வாரக்குடி உரிமையை மீண்டும் புதிய சட்டமொன்றின் மூலமாக அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனில், அதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் திட்டவட்டமான காலப்பகுதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0546/ ’10

15.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த அறுகம்பை பாலத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளனவா என்பதையும்,

(ii) இன்றேல், அதன் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iii) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(iv) இன்றளவில் செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தை நிர்மாணிப்பதற்கான நிதியை முதலீடு செய்துள்ள நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) இதற்கு வெளிநாட்டு உதவி கிடைத்திருப்பின், உதவி வழங்கிய நாடு மற்றும் வழங்கிய தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(ii) அந்த நிறுவனத்திற்கு எந்த அடிப்படையில் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டனவென்பதையும்,

(iii) நிர்மாணப் பணிகளை ஒப்படைப்பதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவாவென்பதையும்,

(iv) அவ்வாறாயின், கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விலைகள் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

கௌரவ ஜானக பண்டார,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"தாம்பே, மீகொட போதிவர்தனாராம ஸ்ரீ மதுரசாம பிரிவென் விஹாரை அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011) — (ஒதுக்கப்பட்ட இரண்டாம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2010, நவெம்பர் 22) [1].

* 2.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— நில அளவைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 65 ஆம் பிரிவின் கீழ், காணி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு 2005 நவம்பர் மாதம் 23ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "நில அளவைச் சபை—2005 (வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப்பத்திரங்கள்)" பிரமாணங்களின் 3 ஆம் பந்தியை திருத்துவதற்காக 2009, திசெம்பர் மாதம் 18 ஆம் திகதிய 1633 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை முற்பணக் கணக்கு—கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 2,400,000,000 இலிருந்து ரூபா 2,162,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — *மீளாய்வு செய்யப்படவில்லை.*

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 960,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : கலாநிதி சரத் அமுனுகம*
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.07.03

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்— 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 6.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 7.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2006,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 8.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2007,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்திற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2007 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 9.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2006,— 1994 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40 (3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 10.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29 (5) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 11.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 12.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் (திருத்தம்) சட்ட மூலம் - இரண்டாம் மதிப்பீடு.

* 16.

மத்தியஸ்த்த சபைகள் (திருத்தம்) சட்டமூலம் - இரண்டாம் மதிப்பீடு.

17.

தாருண்யட்ட ஹெட்டக் ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

செந்தாமரை (சர்வதேச) இலங்கை அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.